★ விலை ரூபா 1:25

ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY
மலர் 26 சித்திரை 15 றஜப் 24 இதழ் 78
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27—4 84

OF JAFFNA, SRI L
27-4

ஆபத்தானகாலத்தில் இயங்க 4000பேர்கொண்ட புதிய படை

தேசிய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

ஆயுதப்படைப் பிரிவில் தனியாக புதியதொரு படைஒன்று அமைக்க, தேசிய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்படையில் நாலாயிரம் பேர் முதலில் சேர்க்கப்படுவார்கள் என்றும், நாட்டில் குழப்பம் அல்லது கலவரம் தலைதூக்கும் ஆபத்தான காலத்தில் இப்படையினர் சேவைக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் அறியப்படுகிறது.

இராணுவம், பொலிஸ் மற்றும் கடற்படை, விமானப் படை ஆகியவற்றுக்குப் புறம்பாக இப்புதிய படை தனித்து இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு உதவிகள் நிறுத்தம்

[கொழும்பு]

ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வசிக்காமல் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த உதவிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

பழைய இருப்பிடங்களுக்கு இவர்களை திரும்பிச் செல்ல வைப்பதற்காகவே இவ்வுதவி நிறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து முகாம்களில் வதியும் அகதிகளுக்கு இவ்வுதவி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

9 ஆயர்-லலித் சந்திப்பு

இனப்பிரச்னை குறித்து ஆராய்ந்தனர்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலிக்கும் - ஒன்பது கத்தோலிக்க பிஷப்பு (ஆயர்)களுக்குமிடையே நேற்றுக் காலை நடைபெற்ற ஓர் ஆலோசனைக் கூட்டத்தில்; இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்க்கும் பல்வேறு வழிமுறைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

சிலாபம் ஆயர் அதிவந். பிராங்மாக்கஸ் பெர்ணாண்டோ தலைமையில் ஆயர்கள் அமைச்சரைச் சந்தித்தனர். யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு உட்பட பல மாவட்டங்களையும் சேர்ந்த ஆயர்கள் இதில் கலந்து கொண்டனர். இக் கூட்டம் அமைச்சர் லலித் அலுவலகத்தில் நடந்தது.

"இந்த நாட்டின் இருபெரிய சமூகங்களை நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றீர்கள் நாட்டின் இன்றைய அதிமுக்கியமான இனப்பிரச்னையை எவ்விதம் தீர்த்துவைக்கலாம் என்று நீங்கள் நல்ல ஆலோசனை தரலாம். அதேபோல இந்த நல்ல யோசனைகளை மக்கள் முன்வைத்து அவைசெயல்படவும் நீங்கள் உதவலாம்'' என்று வரவேற்புரை நிகழ்த்திய அமைச்சர் லலித் அத்துலத்முதலி; கூட்டத்தில் ஆயர்மாரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மிகவும் உன்னிப்பாகக் கேட்டறிந்தார்.

'இனப்பிரச்னையைப் பிரதேச சுயாட்சி மூலம் தீர்த்து வைக்கலாம் என்று ஒரு சாரார் விரும்புகின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

5 அதிபர்கள் பதவி நீக்கம்!

(கொழும்பு)

பாடசாலை மாணவிகளை மானபங்கப்படுத்தினார்கள் என்ற குற்றத்திற்காக ஐந்து பாடசாலை அதிபர்கள் கல்வி அதிகாரிகளினால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம், மட்டக்களப்பு மொனராகலை போன்ற மாவட்டங்களிலுள்ள பாடசாலை அதிபர்களே இவ்விதம் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களாவர்.

இந்த அதிபர்களில் ஒருவர் ஓய்வுபெறும் வயதினையுடைய

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். சுங்க அலுவலகத்தில் ரூபா 3 லட்சம் கொள்ளை!

அலுவலக காரும் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் நேற்று காலைதுப்பாக்கிமுனையில் ஆறு இளைஞர்களால் மூன்று லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணிக்கு சுங்க அலுவலகத்தில் இந்தியப் புடவைகள், 'லிப்' [illegible] ஒலிப்பதிவுக் கருவிகள் ஆகியவை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

கடற்படையினர் பாதுகாப்பிலிருந்த பொருட்கள் நேற்

8-ம் பக்கம் பார்க்க,

ஆர்ப்பாட்டம் நடத்திய 62 பேர் கைது!

(சென்னை)

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அங்கு இராணுவத்தை அனுப்புமாறு கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்திய தி. க. வைச்சேர்ந்த 62 பேர் நேற்று சென்னை பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புமாறு கோரி இவர்கள் தமிழ்நாடு சட்டமன்றம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்தனர்.

சிங்கள ம. வித்தியாலயத்தில் வகுப்புகள் நடக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் நேற்றுவகுப்புகள் நடைபெறவில்லை. வித்தியாலயத்திற்கு வந்த ஆசிரியர்களும், மாணவர்களும் அருகேயுள்ள யாழ் புனித மரியாள் வித்தியாலய கீழ்ப் பகுதி முன் அறையில் தங்கியிருந்தனர். வகுப்புகள் நடைபெறவில்லை.

நேற்றுக்காலை பல பெற்றோரும் சிறுதொகை மாணவர்களும் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு வந்திருந்தனர்.

அவர்கள் எல்லோரும் எரிக்கப்பட்ட சிங்கள மகா வித்தியாலயத்தைச் சுற்றிப்பார்வையிட்டபின்னர் அருகேயுள்ள யாழ் புனித மரியாள் வித்தியாலயத்திற்குச் சென்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

★ இலங்கைத் தமிழர் பிரச்னை———

'இந்திராகாந்தி உடனடியாக நடவடிக்கைஎடுக்கவேண்டும்'

வழக்கறிஞர்கள் கூட்டத்தில் 'அமிர்'

சென்னை, ஏப். 26

"இலங்கைத் தமிழர் பிரச்னையைத்தீர்க்க இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னை வழக்கறிஞர்களின் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-!

"இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்த்து வைக்குமாறு தமிழ்நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள் இந்தியப் பிரதமரிடம் வற்புறுத்தவேண்டும்.

"கடந்த ஜூலை மாத இனக் கலவரத்தின்போது பல தமிழர்கள் உயிரிழந்ததோடு, அவர்களின் உடைமைகளும் சூறை

(8-ம் பக்கம் பார்க்க)

உடுவில் இரட்டைக் கொலைவழக்கு;

மூன்று எதிரிகளுக்கும் 10 வருட கடூழிய சிறையும், 1500 ரூபா அபராதமும்!

(சா. யோகநாதன்)

உடுவில் இரட்டைக்கொலை கொள்ளை வழக்கில் 3 எதிரிகளும் வீடுடைத்தல், கொலைக் குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு ஒவ்வொருவருக்கும் 10 வருட கடூழியச்சிறைத்தண்டனையும், 1500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

அபராதம் கட்டத்தவறினால் ஒவ்வொருவரும் 16 மாத சாதாரண மறியல் அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசிர்வாதம் முன்னிலையில் இவ்வழக்கு 22 நாட்கள் விசாரணை பெற்று நேற்றுப்பிற்பகல் 3-30 மணிக்குத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி ஜே ஜி ஆசிர்வாதம் கடந்த இருதினங்களாக ஜூரிசபையினருக்கு உரைநிகழ்த்தினார்.

இவ்வழக்கில் 78 ஜனவரி 12ம் திகதி உடுவில் செல்லையா என் [illegible] 80,000 ரூபா பெறுமதியான தங்கநகைகளைக்கொள்ளையடித்ததாகவும்சந்திரசேகரம்பிள்ளையை கொலை செய்ததாகவும், அவர் மனைவி அன்னம்மாவையும் கொலைசெய்ததாகவும்கொலை, கொலைமுயற்சி செய்ததாகவும் தா கணேசலிங்கம், இ. ஜோதி [illegible] ஆகியோர்

(8-ம் பக்கம் பார்க்க)

6 சடலங்கள் மட்டுமே

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கரை ஒதுங்கிய 6 சடலங்கள் மட்டுமே, யாழ் பெரிய ஆஸ்பத்திரி பிரேதசாலைக்கு கொண்டுவரப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஈ)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுண் ஒருநாள், ஒருவார, ஒருமாதப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில் 1987

H 100 S Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. ரவிச்சந்திரன் 308 பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 1988

வேலணை - சாட்டி வீதியில் கிணறு வளவு கிணற்றுடன் 30 பரப்பு மூன்று துண்டுகளாகவும், வெள்ளைக்கடற்கரையில் மணல் வளவு என்ற பனங்காணி 90 பரப்பு இரு துண்டுகளாகவும் பிரித்த நிலையில் விற்பனைக்குண்டு. சோ. ச. ரத்தினம் 145/4 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2013

புத்தம் புதிய வீட்டுத்தளபாடங்களும், குளிர்சாதனப் பெட்டி, கிரைண்டர் தையல் மெசின் முதலிய பல வீட்டுப் பாவனைப்பொருட்களும் 7 Sri தொடர்பிலக்க "வோக்ஸ் வேகன்" (Volks Wagon) கார் ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் (28-29) பார்வையிடலாம். முகவரி: 9, கச்சேரி ஒழுங்கை யாழ்ப்பாணம். 2028

வட்டுக்கோட்டை - சித்தன்கேணி சந்தி சிவ சிதம்பரேஸ்வரர் ஆலயத்திற்கு அண்மையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற நிலம் ஆறு பரப்பு விற்பனைக்கு உண்டு. நா. சபாபதி நாதன் நில அளவையாளர் சித்தன்கேணி. 2002

D/o Hyline கோழிக்குஞ்சுகள் 1½-4 மாச H×N பிறவுண் முட்டை கோழிகள் விற்பனைக்குண்டு. 89, இரண்டாம் குறுக்கு தெரு. யாழ்ப்பாணம். 2010

கொக்குவில் கிழக்கு கருவேலடி ஒழுங்கையில் காங்கேசன்துறை வீதியிலிருந்து 260 யார் தொலைவில் நவீன வசதிகள் அமைந்த ஐந்து அறை வீடு, ஐந்து பரப்புக்காணியுடன் உடன் விற்பனைக்குண்டு. வி. இராசசேகரம். 2032

குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் முன்னேற்றமான வியாபாரம் நடக்கும் இடத்தில் கடை குத்தகைக்குக் கிடைக்கும். விபரங்களுக்கு: 104/1, வைத்தியசாலை குறுக்கு வீதி, பிள்ளையார் கோவில் முன்பாக, யாழ்ப்பாணம். 1986

பயிற்சி

Computer programming, ரெலிவிசன் - வீடியோ டெக் திருத்தல் பட வரைஞர் பயிற்சி, மேசன், வெல்டிங், Hotel Management ஆரம்பம்: 05-05-84 Jaffna Technical Institute 52/1 ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். 1992

பாலர் ஆசிரியர் தராதரப்பத்திரம் பெற 1984ம் ஆண்டுக்குரிய பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. ஜி.ஸி.ஈ சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். குறிக்கப்பட்ட தொகையினரே சேர்க்கப்படுவர் உடன் விண்ணப்பிக்கவும். பாலர் ஆசிரியர் சங்கம். 418, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2007

தேவை

இலத்திரனியல் (Electronic Engineering) துறையில் B Sc (Eng) பட்டம் பெற்ற மேல் நாடுகளில் (Japan, England, West Germany, Holland, Hungary) விசேஷ பயிற்சி பெற்ற அரசாங்க திணைக்களத்தில் 10 வருட அனுபவமுள்ள பொறியியலாளருக்கு யாழ்ப்பாணத்தில் வேலை தேவை. தொழிலதிபர்கள் தயவுசெய்து சம்பள விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். Technical Institutesகளில் கல்வி கற்பிக்கவும் தயார். விளம்பர இல: 1999 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1999

சேவை

ஆடி கலவரத்தால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள சுமார் முப்பது வருட காலமாக எல்லாவித வருமான வரி கணக்கு எழுதுவதில் அனுபவமிக்கவரால், யாழ். மாவட்டத்தில் பகுதி நேர கடை கணக்குகள் எழுதி தரப்படும். விபரங்களுக்கு: கே. பி. எஸ். மணியம் "மருதபதி" மானிப்பாய் மேற்கு மானிப்பாய். 2014

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் பெண் பொன்னம்மா என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன]
நியாயாதிக்கம்]
இல. ரி/198

தம்பிமுத்து நாகலிங்கம் சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்.

எதிர்மனுதாரர்.

1. நாகலிங்கம் லேய்யாங்
2. நாகலிங்கம் ஜெய்ஜன். இருக்கும் 49 கம்போர்னி அவென்யூ லண்டன்- 13 (தங்கள் அற்றோணித் தத்துவகாரன் மனுதார் மூலம் தெரியப்படுகிறார்கள்)

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 6ம் திகதி முற்பகல் 9 00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுள கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி.

கோட்டுக் கட்டளைப்படி.
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

ச. யோகராசா
மனுதாரரின் சட்டத்தரணி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

கட்டிடங்கள் புனரமைப்பதற்கும் விளையாட்டு மைதானம் செப்பனிடுவதற்குமான கேள்விகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்:-

01. நிர்வாகக் கட்டிடம்
02 பழைய நூல்நிலையக் கட்டிடம் புனரமைப்பதற்கும்
03. விளையாட்டு மைதானம் நிரவி மட்டமாக்கி (Bull Dozer) மூலம் செப்பனிடுவதற்கும்.

பொறியிடப்பட்ட கேள்விகள் (Sealed Tender) கட்டிடத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன. வேலைபற்றிய விபரங்கள் விண்ணப்பப்படிவங்கள் ஆகியவற்றை பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 07-05-84ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளமுடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் 200/-க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளை அனுப்பப்பட வேண்டும். கேள்விகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 17-05-84 ஆகும். விண்ணப்பக்கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் UJ/F/SK/01/17/05/84 எனக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்
2026

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதி மன்றம்
மல்லாகம்

வட்டுக்கோட்டை என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற சிவஞானம் சிறிகுமாரன் என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரண சாதன]
நியாயாதிக்கம்]
இல. ரி / 193

சிவஞானம் சிறிகுமாரன் கைம்பெண் இரசேஸ்வரி மே/பா. இரகுநாதன் பொன்னையா சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

எதிர்மனுதாரர்

1. சிறிகுமாரன் சுகன்யா (பராயமற்றவர்).
2. பொன்னுத்துரை ஜெயகுமாரன் (பராயமற்ற 1ம் எதிர்மனுதாரரின் வழக்குப் பாதுகாவலன்) வட்டுக்கோட்டை.

எதிர்மனுதாரர்கள்,

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி முற்பகல் 9 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுள கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984 ம் ஆண்டு பங்குனி மாதம் 6ம் திகதி.

கோட்டுக் கட்டளைப்படி.
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

தயாரித்தவர்.
க. குணரத்தினம்
மனுதாரரின் சட்டத்தரணி
2018

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பகிரங்க ஏல விற்பனை

பல்கலைக்கழகத்தில் பாவனையிலிருந்த புகைப்படப் பிரதி எடுக்கும் இயந்திரம் (Photo Copying Machine, 'Canon' Model) 02-05-84 அன்று முற்பகல் 10-00மணிக்கு பல்கலைக்கழக வளவினுள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில்வெற்றிபெறுவோர் மொத்தப் பெறுமதியில் 50% த்தை உடனடியாகவும் மிகுதியை 04-05-84க்கு முன்னதாக செலுத்திய பின்னரும் இயந்திரத்தை அப்புறப்படுத்தமுடியும்.

பதிவாளர்
2027

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. புத்தக ராக்கைகள் (உருக்கு)
02. புத்தகராக்கைகள் (மரம்)

கேள்விகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 50/-பெறுமதியான தபாற்கட்டளை அல்லது காசுக்கட்டளையுடன் 07-05-84ம் திகதிக்கு முன்னர் தேவைக்கான மாதிரி அளவுகள் விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விகள் யாவும் 17-05-84ம் திகதிக்கு முன்னர் நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். அத்துடன் விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் UJ/F/SK/02/17/05/84 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்
2025

பிறந்ததின வாழ்த்து

செல்வன் காண்டீபன்

பொற்பதி வீதியைச் சேர்ந்த சிவகுருநாதன் நாகரஞ்சனி தம்பதிகளின் அருமைப்புதல்வன் செல்வன் காண்டீபன் தனது பிறந்ததினத்தை இன்று (27-4-1984) தனது பெரியப்பா வீட்டில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை பெற்றோரும், உற்றாரும், நண்பர்களும் சகலகலைகளும் பெற்று சிறப்புடன்வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தஷ்பந்தி இல்லம்
பொற்பதி வீதி.
கொக்குவில்.

2019

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

கண்ணகை அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
புங்குடுதீவு
ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை

மேற்படி கோவில் சம்பந்தமாக பொருளாளர் திரு. மு. சி. சண்முகராசா அல்லது செயலாளர் திரு. க. தாமோதரம்பிள்ளையிடம் மாத்திரமே நிதி கொடுக்கல்வாங்கல் செய்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி அடியார்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மு. சி. சண்முகராசா,
பொருளாளர்.

(2017)

பயிற்சியாளர் தேவை

பத்திரிகை நிறுவனத்திற்கு அச்சுக்கோர்ப்பதில் பயிற்சிபெற ஆர்வமும் உற்சாகமும் உள்ள படித்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் ஜி. ஸி. ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம், தமிழ் உட்பட ஐந்து பாடங்களுக்குக் குறையாத சித்தி பெற்றிருப்பதுடன், 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும். யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அயல் கிராமங்களில் வசிப்பவராயிருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு 30-04-84க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் பிரிவுக் கிராமசேவை அலுவலரின் சான்றுப் பத்திரம், தகுதிச்சான்றுப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆகியவற்றின் "போட்டஸ்ட்" பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

விளம்பர இல: 1974,
ஈழநாடு லிமிட்டெட்,
தபால்பெட்டி இல: 49, யாழ்ப்பாணம்.
1974

பஞ்சாப் பிரச்னையில் வெளிச்சக்திகள் பின்னணியில்

பிரதமர் இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 26

"பஞ்சாப் மாநிலத்தில் இடம்பெற்றுவரும் பயங்கரச் சம்பவங்களுக்கு சில வெளிநாட்டுச் சக்திகள் பின்னணியாகவுள்ளன. தேசிய பாதுகாப்பின் நலனை முன்னிட்டு அந்த சக்திகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாதுள்ளது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஹிமாச்சல் பிரதேசத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது கூறினார்.

"பஞ்சாப்பில் 'அகாலிதள்' இயக்கமே வன்முறைகளுக்கும், தீவிரவாதச் செயல்களுக்கும் காரணமாகும். இது தற்போது தனது கட்டுப்பாட்டை இழந்து வெளிச் சக்திகளின் பிடியில் சிக்குண்டுள்ளது. அச் சக்திகளின் வழிகாட்டல்களின்படியே இந்தியாவில் குழப்ப நிலையை ஏற்படுத்த 'அகாலிதள்' இயக்கம் செயல்பட்டு வருகின்றது" என்று திருமதி காந்தி மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "கடுமையான நடவடிக்கைகள் பஞ்சாப் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர எடுக்கப்படும். இந்நடவடிக்கைகளில் சில பரிசீலனையின் கீழ் உள்ளன" என்றார்.

இதேவேளை திருமதி காந்தி கடந்த செவ்வாய்க்கிழமை காலை முன்னறிவித்தலில்லாத திடீர் விஜயமொன்றை பஞ்சாப் தலைநகரான சண்டிகாருக்கு மேற்கொண்டார். இவ் விஜயம் பதினைந்து நிமிடங்களே நீடித்தது. பஞ்சாப் ஆளுநர் திரு. பாண்டே திருமதி காந்தியை விமான நிலையத்தில் சந்தித்தார்.

திருமதி காந்தியுடன் உள்துறை அமைச்சு செயலாளர் திரு. எம். கே. வாகியும் வந்திருந்தார். திரு. வாகி செய்தி நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில், இன்னும் இரு மாதங்களில் பஞ்சாப் தீவிரவாதிகளின் புறமுதுகு முறிக்கப்படுமென்று கூறினார். தீவிரவாதத் தலைவர்களிடையே கருத்துமோதல்கள் தோன்றியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாப் அமிர்தஸரஸ் பொற்கோயிலை புகலிடமாகக்கொண்டிருக்கின்றனர். இங்கு அவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டு பலர் கொல்லப்படுவதாகவும் கூறப்பட்டது. (ஜ)

அக்கினோ கொலை விசாரணை:

அமைச்சர் மனைவி சாட்சியத்துக்கு அழைப்பு!

மணிலா, ஏப். 26

பிலிப்பைன்ஸ் நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் கடந்த ஆண்டு நாடு திரும்பியபோது மணிலா விமான நிலையத்தில் வைத்து சுட்டுக் கொலைசெய்யப்பட்டது தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்விசாரணையில் சாட்சியமளிக்க பிலிப்பைன்ஸ் அமைச்சர் ஒருவரின் மனைவியும் அழைக்கப்பட்டுள்ளார்.

இவர் லண்டனில் திரு. அக்கினோவை அவர் கொல்லப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் சந்தித்துள்ளார், அப்பொழுது அவரிடம் பிலிப்பைன்ஸ் செல்ல வேண்டாமெனவும், அங்கு உயிராபத்துக்காத்திருப்பதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

இத்துடன் திரு. அக்கினோவின் கொலைக்கும் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துக்கும் தொடர்பிருப்பதாகவும் இவர் பின்னர் தெரிவித்திருந்தார். இவற்றைத்தொடர்ந்தே அக்கினோ கொலை விசாரணைகளில் சாட்சியமளிக்க இந்த அமைச்சரின் மனைவி அழைக்கப்பட்டுள்ளார். (ஜ)

கீரிமலையிலும் 'பதனீர்' தொழிற்சாலை!

(மாவிட்டபுரம்)

கீரிமலையில் பதனீர் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையொன்று விரைவில் இயங்க ஆரம்பிக்க உள்ளது.

பனைத்தொழில் நுட்ப வல்லுனர் திரு. கே. சம்பந்தம் வழங்கிய ஆலோசனையின் பேரில் தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் மேற்படி தொழிற்சாலையை அமைக்கும் வேலையை மேற்கொண்டுள்ளது.

மேற்படி தொழிற்சாலையின் அமைப்பு வேலைகள் விரைவில் முடிவடைந்து அடுத்த வாரமளவில் இத்தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பரீட்சார்த்தமாக பதனீர் போத்தலில் அடைக்கப்படுமெனவும் பின்னர் அது விஸ்தரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

லிபியத் தூதரகத்தின் முன் பலியான

இந்தப் பெண் பொலிஸின் பரிதாபக் கதை!

லண்டன், ஏப் 26.

பிரிட்டனில் இரு வாரங்களுக்கு முன்னர் லிபியத் தூதரகத்துக்கு முன்னால் பிரிட்டிஷ் பெண் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே. இவர்பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் மனமுருகச் செய்வனவாகவுள்ளன.

பிளெச்சர் என்பது இவர் பெயர். வயது 25 ஆகும். லிபிய தூதரகத்திற்கு முன்னால் லிபிய அதிபர் கேர்ணல் கடாபியின் அதிருப்தியாளர்களது ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை இவர் அவதானித்து நின்றார். அப்போது லிபிய தூதரகத்தின் உள்ளிருந்து அவ்வூர்வலம்மீது சுடப்பட்டபோது இவரும் கொல்லப்பட்டார்.

சிறுமியாக இருக்கும்போதே பொலிஸ் சேவையென்றால் இவருக்கு மிகவும் பிடித்தமானதாம். வளர்ந்ததும் தாம் ஒரு பொலிஸ் சேவகியாகவே வரவேண்டுமென்று கூறிவந்தாராம். பின்னர் உரிய வயதையடைந்ததும் இவர் பொலிஸ் சேவையில் சேர விண்ணப்பித்தார். ஆனால் இவரிடம் அச்சேவைக்கு ஒருவர் சேருவதற்குத் தேவைப்படும் உயரம் இருக்கவில்லை. ஐந்தடி இரண்டு அங்குலங்களை மட்டுமே கொண்டிருந்தார். இதனால் அவர் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகவில்லை. பின்னர் இவர் இச்சேவைமீது கொண்டிருந்த அபிமானத்தையும், இவரது கம்பீரத்தையும் அவதானித்தே இவர் இச்சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

"இவர் தனது கடமைகளை நேர்த்தியாகவும், துணிவுடனும் செய்துவந்தார். சக ஊழியர்களின் நட்பையும் அன்பையும் பெருவாகப் பெற்றிருந்தார்" என்று இவரது சகாக்கள் கூறினர். பல பொது மக்கள் இவர் நினைவாக மலர் வளையங்களையும், அனுதாபச்செய்திகளையும் இவரது இல்லத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர். (ஜ)

பிரேஸில் நாடாளுமன்றம் முற்றுகை!

லண்டன், ஏப். 26

தென் அமெரிக்க நாடான பிரேஸிலில் ஆயிரக்கணக்கான மக்கள் அதன் நாடாளுமன்றக் கட்டிடத்தை முற்றுகையிட்டனர்.

இவர்கள் வாக்கெடுப்பு ஒன்றை உடனடியாக நடத்தி புதிய அரசாங்கத்தையும், பிரதமர் ஒருவரையும் தெரிவு செய்யும்படி கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பிரேஸிலின் தற்போதைய அரசாங்கம் பொதுத்தேர்தலைப் பின்போட்டு வருகின்றது. 1988ம் ஆண்டிலேயே புதியபிரதமந்திரி தெரிவுசெய்யப்படுவார் என்று இவ்வரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் நாட்டு மக்கள் இவ்வறிவிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. (ஜ)

வட்டுக்கோட்டையில்

விறகுத்தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அரசினர் மரக்காலையில் நீண்டகாலமாக விறகு இல்லாததால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வந்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் பொதுமக்கள் தனியார் விறகுகாலைகளில் அதிக விலை கொடுத்து விறகு வாங்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

வேம்படி மாணவிகள் சாதனை!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளிவந்த க. பொ. த. சாதாரணப் பரீட்சை முடிவுகளின்படி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவிகளுள் ஒருவர் 8 பாடங்களில் அதிவிசேட சித்தியும், மூவர் ஏழு பாடங்களில் அதிவிசேட சித்தியும், 12 பேர் 6 பாடங்களில் அதிவிசேட சித்தியும் பெற்றுள்ளனர்.

250 மாணவிகள் பரீட்சைக்கு தோற்றி, அவர்களுள் 214 மாணவிகள் க. பொ. த. உயர்தர வகுப்பு படிப்பிற்கு தகுதி பெற்றமை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பரீட்சை முடிவுகள் குறித்து கல்லூரி அதிபர் திருமதி இராசரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், "மாணவர்களின் திறமை கல்லூரிக்கு பெரும் வெற்றியைத் தேடித் தந்துள்ளது" என்று குறிப்பிட்டார். [ஜ]

விவசாயச் செய்கையைப் பாதிக்கும் பூச்சி இனம்

(மாவிட்டபுரம்)

விவசாயிகளது விவசாயச் செய்கையைப் பாதிக்கும் வகையில் பரவிவரும் புதிய பூச்சியினம் குறித்து விவசாயப் பகுதியினர் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர்.

வலி. வடக்குப் பகுதியில் விவசாயிகளது விவசாயச் செய்கையைப் பாதிக்கும் வகையில் கறுப்பு நிறமான குளவி போன்ற பூச்சியினமொன்று பரவிவருவதாகவும், இந்தப் பூச்சியினம் பாகல் கொடிகளில் அதிகமாகக் காணப்படுவதாகவும், இதனால் விவசாயச் செய்கை பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து கீரிமலை கமநல சேவை நிலையப் போதனாசிரியர் திரு. ஆர். கருணாகரன், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. கே. கந்தசாமி ஆகியோர் வலி வடக்குப் பகுதியிலுள்ள விவசாயிகளின் தோட்டங்களுக்குச் சென்று இப்புதிய பூச்சி இனம் குறித்து ஆராய்ந்தனர்.

இந்தப் பூச்சியினம் வேகமாகப் பரவிவருவதால் இந்தப் பூச்சியினத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது குறித்து விவசாயப் பகுதியினர் ஆராய்ந்துவருகின்றனர்.

இப்பூச்சி இனத்தில் சிலவற்றைப் பிடித்து திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி ஆய்வு நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

PHILIPS

பிலிப்ஸ் நிகரற்ற ஒளி.



பளிச்சிடும் வெளிச்சத்திற்கும் நீடித்த உழைப்புக்கும் தரமான படைப்பு பிலிப்ஸ்.
பிலிப்ஸ் பல்புகள் மற்றும் புளோரசண்ட் டியூப்களைப் பாவியுங்கள். விலைகள் ரூ. 17/75 முதல்.

இலங்கையில் ஏகப்பிரதிநிதி
ஹேலீஸ் லிமிடெட்
காட்சி அறைகள்: கொள்ளுப்பிட்டி தொலைபேசி 86958
மேலும் கிடைக்கும் இடம்: தீர்வையற்ற விற்பனைத் தொகுதி [illegible], கடை இல 2.

Zenith

மணிவாக்கு

முன்னே தன் குற்றத்தைக் கண்டு நீக்கிப் பிறகு பிறருடைய குற்றத்தை ஆராய வல்லவனானால், தலைவனுக்கு என்ன குற்றம் ஆகும்.

— வள்ளுவர்

நமது நோக்கு

தமிழ்நாடு முதல்வரின் மறுப்பு

இலங்கைத் தமிழ்த் தீவிரவாத இயக்க இளைஞர்களுக்குத் தமிழ் நாட்டில் பயிற்சியளிக்கப்படுகிறது என்பதைத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உறுதியாக மறுத்திருக்கிறார். அத்தகைய வசதியோ என்னவோ தமிழகத்தில் இல்லையென அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளதை அலட்சியம் செய்துவிடமுடியாது.

ஏற்கனவே இங்குள்ள இந்திய உயர் ஸ்தானிகரும், மத்திய அரசின் முக்கியஸ்தர்களும் இதை முற்றாக மறுத்தபோதிலும், இலங்கையின் ஒரு பிரிவினர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர். இப்பொழுது தமிழ்நாடு முதலமைச்சரே பகிரங்கமாக மறுத்திருக்கிறார்.

இது வெறும் அரசியல் பேச்சு என்று யாரும் கருதிவிடலாகாது. ஒரு மாநிலத்தின் ஐந்து கோடி மக்களின் தலைவர் - தலைமை அமைச்சர் என்ற வகையில் மிகவும் பொறுப்பான நிலையில் இருந்து இக்கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

சென்னையில் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு இந்த மறுப்பை வெளியிடுவதற்கு முன்னர் திரு. இராமச்சந்திரன் தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ்த் தீவிரவாத இயக்கத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருக்கிறார். அதையும்விட புதுடில்லி சென்று இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தியுடன் ஆலோசனைகள் கலந்துவிட்டுவந்த பின்னரே செய்துள்ளார். எனவே மனித உரிமைகள் தொடர்பான மேற்படி மகாநாட்டில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் சகல விதத்திலும் நன்கு ஆராய்ந்த பின்னரே வெளியிடப்பட்டுள்ளன என்பதை உணரவேண்டும்.

"இலங்கைத் தமிழர்கள் அநாதைகள் அல்ல" என்று அவர் வெளியிட்டுள்ள கருத்து துன்பப்பட்டு நொந்துபோயிருக்கும் இலங்கைத் தமிழ் இனத்தவர்களுக்குச் சற்றுத் தெம்பும் ஆறுதலும் அளிப்பதற்கான முயற்சியேயன்றி வேறொன்றுமில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு என்ன நேர்ந்தாலும் எமக்குக் கவலையில்லை என்றவகையில் இங்குள்ள பெரியவர்கள் கருத்து வெளியிடும்போது அண்டை நாட்டிலிருந்து இப்படியான ஒரு வார்த்தை காதில் விழுவது தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்குமென்பதில் சந்தேகமில்லை.

"பயங்கரவாதிகளை ஒழிப்பதே ஆயுதப் படையினரின் நோக்கம். தமிழ் மக்களுக்கு எதிராக எதுவுமில்லை" என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் சொல்லிவருகிறார். அவர் சொல்வது வானொலி மூலமாக உலகம் முழுவதும் பரப்பப்படுகிறது.

அவர் சற்று இறங்கிவந்து பாதிக்கப்பட்ட சாதாரண மக்களின் குரல்களைக் கேட்டுப் பார்ப்பது நல்லது.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சமுகமான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கப்படவேண்டும் என்பதில் இந்தியத் தலைவர்கள் உறுதியுடன் இருக்கிறார்கள் என்பதை அங்கு சென்று பேச்சு நடத்திவிட்டு வந்துள்ள திரு அத்துலத் முதலி அடிக்கடி பிரஸ்தாபித்து வருகிறார்.

தமிழக முதலமைச்சரும் புதுடில்லியின் கருத்தையே ஆதரிக்கிறார் என்பது தெளிவு. ஆனால் ஏற்கனவே இலங்கைத் தமிழ் மக்கள் ஏமாற்றமுற்று நம்பிக்கை இழந்து நிராதரவான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டநிலைமைக்கு பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வு என்ற மனப்பான்மையில் மூழ்கிப் போயிருக்கிறவர்களும் தள்ளப்பட்டுவிடலாகாது. அப்படியான ஒரு நிலை உருவாகாமல் பார்ப்பது இலங்கை அரசின் கடமை. இல்லையேல் சர்வதேச ரீதியில் பெரும் எதிர் விளைவுகள் ஏற்படலாம்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள பல கட்சி மகாநாடு இன்னும் சாத்திரத்துக்கு விளக்கேற்றினாற்போல மினுங்கிக் கொண்டிருக்கிறது. அதனை நிரந்தரமாகப் பிரகாசிக்கும் துருவ வெளிச்சமாக மாற்றவேண்டும் என்பதே இந்தியத் தலைவர்களின் விருப்பம். இது சாத்தியமாகுமா?

பாவனையாளர்களுக்காகவே பாதுகாப்புச்சட்டம்

ஏ. என். எஸ். திருச்செல்வம்

(பொருளாளர், பருத்தித்துறை பாவனையாளர் சங்கம்)

பாவனையாளர்களுக்கு வேண்டிய பொருட்களை குறிப்பிட்ட விலையில் குறிப்பிட்ட அளவில் விற்பனை செய்து பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவரும் வர்த்தக நிறுவனங்கள் வளர்ச்சியடைந்து மறுமலர்ச்சி பெறும். வர்த்தகர்கள் முழுமையாக இலாபத்தை மாத்திரம் கொண்டு செயற்படாமல் பாவனையாளர்களுக்குச் சேவை மனப்பான்மையுடனும் செயற்படுவது சிறப்புடையதாகும்.

இன்று பலவிதமான விற்பனை நிலையங்கள் உருவாகிவருவதைக் காண்கிறோம். உணவு வகைகள் அன்றாடப் பாவனைப் பொருட்கள் என்பன விற்பனையாகும் நிறுவனங்கள் முன்பு இருந்ததிலும் பார்க்க அதிகளவில் தோன்றுகின்றன. பல விற்பனை நிறுவனங்கள் பல இடங்களில் தோன்றுவது பொதுமக்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிறுவனங்கள் பொதுமக்களுக்கு பாவனைப்பொருட்களை விற்பனை செய்வதுடன் அவர்களுக்குச்சில அசௌகரியங்களையும் கொடுப்பதாக எண்ணத் தோன்றுகிறது. அன்றாடத் தேவையான உணவு வகைகள் குறிக்கப்பட்ட விலைக்கு மேலாக விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகின்றது. பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்படி இக்குற்றம் பாரிய குற்றமாகக் கணிக்கப்படுகிறது.

பலவிற்பனை நிலையங்களில் பொருட்களின் விற்பனை விலைகள் குறிக்கப்படுவதில்லை. விற்பனை நிலையத்தை நடாத்துபவர்கள் உரிய விலையில் பொருட்களை விற்பனை செய்யாமல் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் நோக்குடனேயே இம்முறையைக் கையாளுகின்றனர். இதுவும் சட்டத்தை மீறுவதுடன் பொதுமக்களுக்கு அவ்விற்பனை நிலையத்தில் நம்பிக்கையின்மையும் ஏற்படுத்தக் காரணமாகின்றது.

எக்காரணம் கொண்டும் குறிக்கப்பட்ட விலையை மாற்றவோ, அழிக்கவோ கூடாது. பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப்படக்கூடிய இக்குற்றத்தைக் கண்டால் பாவனையாளர்கள் உடனடியாக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கோ, பாவனையாளர்சங்கத்திற்கோ, உதவி அரசாங்க அதிபருக்கோ அறிவித்தால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தக்க சட்டநடவடிக்கை மேற்கொள்ளமுடியும்.

கவனிக்க வேண்டும்

குறிப்பிட்டவிலைக்கும் மேலாக ஒருபொருள் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதைப் பொது மக்கள் கவனித்துக்கொள்ளவேண்டும் என பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி விற்பனை நிலையங்களில் கையாளப்படும் நடவடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும் என்பதை வர்த்தக நிறுவனங்களுக்கு அறிவிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

விலைப்பட்டியல்கள் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படவேண்டியதும் வாங்கப்பட்ட பொருட்களுக்கு ரசீது கொடுக்கப்பட வேண்டியதும் முக்கியமாகும். பொருட்களில் குறிக்கப்பட்ட விலைக்கே விற்பனை செய்யவேண்டும். தரமான பொருட்களையே விற்பனைக்கு வைத்திருக்கவேண்டும். கலப்படத்திற்கு இடமளிக்கக்கூடாது. பொருட்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு இல்லை எனக்கூறக்கூடாது. நிபந்தனை விற்பனை செய்யக்கூடாது. மெற்றிக் அளவுத்திட்டத்திலேயே பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். றாத்தல், யார், போத்தல் அளவீடுகளைப் பாவிக்கக்கூடாது.

ஏழைகளின் பசியைப்போக்குவதற்குத்தேவையான பாணில் கூட சில வர்த்தகர்கள்மோசடி செய்வது வேதனைக்குரிய விடயமாகும். பாணின் நிறையைக் குறைத்தும், தரத்தைக்குறைத்தும், அதே விலைக்கு விற்பனை செய்யப்படுவதைப் பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு பாவனையாளர்கள் பாதிப்படையும் வகையில் வர்த்தக நிறுவனங்கள் செயற்படுவதனால் பாவனையாளர்களுக்கும், அந்நிறுவனத்திற்கும் தீமையே ஏற்படுகின்றது.

பாவனையாளர்களின் பாதுகாப்புக்கருதி ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பாவனையாளர் சங்கங்கள் இயங்கிவருகின்றன. பாவனையாளர்கள் தங்களுடைய குறைபாடுகளை இச்சங்கங்களுக்கோ அல்லது உதவிஅரசாங்க அதிபருக்கோ அல்லது விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கோ தெரியப்படுத்துவதனால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாவனையாளர்கள் நன்மையடைய வாய்ப்பு ஏற்படும்.

பாவனையாளர்கள் பாதுகாக்கப்படுவது அவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஒரு சில பாவனையாளர்கள் தரும் தகவல்கள் ஏனைய பாவனையாளர்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். எனவே பாவனையாளர்கள் யாவரும் விழிப்புடன் செயற்பட்டு தம்மைத்தாமே காப்பாற்றக்கூடிய வழிமுறைகளைக் கையாளத் தவறக்கூடாது.

வெள்ளிச்சிந்தனை

வாக்குச்சித்தி

மனிதனுடைய வாக்கு எத்தகையது? தன்னுடைய கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்துவதுதான் வாக்கின் சாதாரண வலிமை. இலகுக்கு உண்மையை மறைக்கவும் தங்கள் கொள்கைகளைச் சாதித்து மற்றவர்களையும் மருட்டவும் கூடவாக்குவலிமை உதவுகின்றது ஆனால்;

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனிதனின் வாக்கில் வருவது காரியமாக மாறுவதும்; நடக்கவிருக்கும் செய்திகளே வார்த்தைகளாக வெளிப்படுவதும் உண்டு.

இருபத்தைந்து வருடங்களுக்குப்பின் நடக்கவிருந்ததை -ஈழநாடு நிறுவனம் எரிக்கப்பட்டிருந்ததை யோகசுவாமிகள் கூறியிருந்தமை நடக்கவிருந்த செய்தியை வெளியிட்ட பண்பாகும். இதுபோன்றதுமன்றி "மக்களுக்கும் பயன்தரத்தக்க பிரசுரங்களை வெளியிட்டுச் சேவைசெய்யவேண்டும்" என ஒரு பெரியார் கூறியமையே ஈழநாடு பத்திரிகை உண்டாவதற்குக் காரணமானதென்றும் அப்படிக்கு நிறைவின் வாக்குச் சித்தியைப்பற்றி அறிந்து கொள்ளலாம். சிதம்பரம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் (இலக்கண சுவாமிகள்) கூறிய வாக்கால் ஒரு பத்திரிகை தோன்றி நிலைபெற்றுள்ளது என்றால் அவர் வாக்குச் சித்தியை விளக்கவேறு உதாரணம் தேவையில்லை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்வானுறையும்தெய்வமெனமதிக்கத்தக்கவன் என்ற வள்ளுவர்கருத்துக்கு அமைய தூய்மையான ஆசாரம், பொறுமை, வஞ்சம் பொறாமை முதலிய தீக்குணங்களுக்கு இடங்கொடாதலும் நல்லறிவுக்கு விரோதமற்ற வாழ்வையுடையராயிருத்தலும் தெய்வவழிபாடு, பிரார்த்தனை மந்திரசெபம் முதலியவற்றையும் ஒருவர் கடைப்பிடித்தலாலும் மனிதனேதெய்வமாகலாமென்பதற்கு இலக்கணசுவாமிகளே இனிய உதாரணமாகவுள்ளார்.

'சலமிலன் சங்கரன்
சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும்
நல்குவான் நலன்
குலமிலராகிலும் குலத்துக்
கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது
நமச்சிவாயவே

—திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளாளன்.

மௌனகுரு கடவுற் சுவாமிகள் ஜயந்திதினம் இன்று!

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணமென்னும் புனித பூமியில் ஆன்மீக நெறியை முதன் முதலில் விதைத்தவர் கடையிற் சுவாமியென்ற புனிதராவார். இஞ்ஞானிக்கு யோகர் சுவாமிகள், மறவன்புலோ குழந்தைவேற்சுவாமிகள் போன்ற தவஞானிகள் சிஷ்யர்களாகத் தோன்றினார்கள். மறவன்புலோ குழந்தைவேற் சுவாமிகளைத் தம் குருவாகப் பெற்றுயர்ந்தவரே பெரிய குருநாதரெனப் போற்றப்பட்ட மறவன்புலோ சின்னத்தம்பிக்குரு சுவாமிகளாவார்.

இத்தவஞானிக்கு தொண்ணூற்றாறு சிஷ்யர்கள் தோன்றினார்கள். இவர் முத்தித் தலமான செல்வச்சந்நிதியில் அமர்ந்திருந்து சிஷ்யர்களுக்குப் போதனை புரிந்தும் அநேகர் கண்ணொளி கொடுத்தும் அருளொளி பரப்பி வந்தார்கள்.

இக்குருதேவரின் பிரதம சிஷ்யராக விளங்கியவர் [illegible] குரு கடவுள் சுவாமிகளாவார்! இவரின் இயற்பெயர் சிவஸ்ரீ குருகுப்பிள்ளை சுவாமிகள் என்பதாகும். இவரதுஜயந்தி தினம் இன்று மறவன்புலோ கைதடி சுத்த சிவசமரச சன்மார்க்க தர்மகர்த்தா சபையினரால் சுவாமிகள் அமர்ந்து அருளாட்சி புரிந்த செல்வச்சந்நிதியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

அல்வாயைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் உலகெல்லாம் தமது பிறப்பிடமாகக் கொண்டார்கள். உலகிலுள்ள ஜீவர்களெல்லாம் கடவுளின் இருப்பிடமென உணர்ந்தார்கள். எல்லோரையும் கடவுள் கடவுள் என அழைத்தார். எவன் ஒருவன் எதை சதா சிந்திக்கின்றானோ அவன் அது ஆகிவிடுகின்றான் என்ற கூற்றுக்கிணங்க சுவாமிகளும் சதா கடவுள் எண்ணமாக இருந்தார்கள். [illegible]

சுவாமிகள் 1975ம் ஆண்டிலிருந்து முதன் முதலில் மௌன விரதத்தை மேற்கொண்டார். முதலில் வியாழக்கிழமைகளில் மேற்கொள்ளப்பட்ட மௌனவிரதம் இரண்டாண்டுகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விஸ்தரிக்கப்பட்டது. பின் 1976ம் ஆண்டிலிருந்து நித்திய மௌன விரதத்தைப் பலசோதனைகளுக்கு மத்தியிலும் சுவாமிகள் 24-9-84ல் மகா சமாதியடையும் வரையிலும் கடைப்பிடித்தார்.

-வ. குமாரசாமி

குருபூசை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்தெற்கு இருபாலை அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கொண்டாடப்படவுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலி சிவன்கோயில் இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன்கோயில் பஞ்சமூர்த்திகள் இரதோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-00மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை காலை 8-00மணிக்கு தீர்த்தோற்சவமும், செவ்வாய் பிற்பகல் 3-00மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

கிளிநொச்சி கல்விப்பிராந்தியம்

அடுத்தமாதம் முதல் தனித்து இயங்கும்!

(கல்வியங்காடு)

கிளிநொச்சி மாவட்டத்தில் தனிக்கல்விப் பிராந்தியம் அடுத்தமாதம் முதல் இயங்க வுள்ளது இப்பிராந்தியத்துள் உள்ள சகல பாடசாலை ஆசிரியர்கள், பிற ஊழியர்களது (பைல்) கோவைகளும் கிளிநொச்சி கந்தோருக்கு அனுப்புவதற்கான வேலைகள் யாழ் கல்வித்திணைக்களத்தில் நடைபெறுகிறது. இம்மாவட்டத்துள் அடங்கும் பாடசாலை ஆசிரியர்களது உள்ளூரான இடமாற்றங்களும் தற்சமயம் செய்யப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்து ஆசிரியர்களுக்கான அடுத்தமாதச் சம்பளம் யாழ். கல்வித் திணைக்கள மூலமே வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது. முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளராக உள்ள ஜனாப் எம்.எம். மன்சூரே கிளிநொச்சி கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிவார்.

உழவாரத் தொண்டு

(யாழ்ப்பாணம்)

இருபாலை சைவபரிபாலன சங்க மாதர் அணியினர் இன்று மாலை இருபாலை அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய உள் வீதியில் உழவாரத் திருத்தொண்டு செய்வர். இம் மாதர் அணித்தலைவி திருமதி புவனேஸ்வரி நவரத்தினராஜா தலைமையில் நடைபெறும்.

தொலைபேசிகளை இயங்கவைக்க நடவடிக்கை

(மன்னார்)

அண்மையில் பெய்த பெருமழை, பெருவெள்ளம் என்பவற்றினால் மன்னார் பகுதியில் இயங்காத நிலையிலுள்ள தொலைபேசிகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட தொலைத் தொடர்பு திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

மூன்று வார பயிற்சி

(கல்வியங்காடு)

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களாக அரசாங்கப் பாடசாலைகளில் நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் 100 மாணவர்கள் தற்சமயம் 8 வாரப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அநுராதபுரம் ஆசிரியர் கலாசாலையில் ஆண்களும், மகரகமை ஆசிரியர் கலாசாலையில் பெண்களும் பயிற்சி பெறுகின்றனர்.

வடபகுதி நிலைமையினால் தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்கள் பயிற்சிக்குச் செல்லவில்லை என்று தெரிகிறது. தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பயிற்சியில் விரும்பினால் முன்பு செல்லத் தவறிய மாணவர்கள் அனுமதி பெறலாம் என்று தெரிகிறது.

"மனிதவாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும் பண்புகள்"

((புலோலி))

மனிதனுக்கு பொறுமை கட்டுப்பாடு, ஒழுக்கம், அடக்கம் சகிப்புத்தன்மை போன்ற பண்புகளே வாழ்க்கையில் வெற்றியடையச்செய்கின்றன. விளையாட்டுக்கள் இப்பண்புகள் யாவற்றையும் மனிதனுக்குப் பயிற்றுவிப்பதனால் மனித வாழ்க்கைக்கு விளையாட்டுக்கள் முக்கியமாகின்றன.

இவ்வாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே விளையாட்டமைச்சின் உதவியுடன் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டதிகாரி திருமதி ஸ்ரீவசந்தி செல்வேஸ்வரன் இவ்விளையாட்டுப்போட்டிகளுக்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தார். விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன, உதவி அரசாங்க அதிபர் திரு வேலும் மயிலும் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

மனோவளர்ச்சியையும் சமுதாய வளர்ச்சியையும் மேம்படுத்துவதில் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு விளையாட்டு வீரர்களாகத் திகழ்வோருக்கு உலகிலேயே தனிப்பெரும் மதிப்புண்டு.

அரசாங்கம் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்குப் பல்வேறு வகையான நடவடிக்கைகளை நாம் முழுமையாகப் பயன்படுத்தத் தவறக் கூடாது.

விளையாட்டுக் கழகங்கள் சிறப்பாக இயங்கி தத்தமது பகுதி இளைஞர், யுவதிகளை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தி வீரர்களாக்க வேண்டும். அப்போதுதான் விளையாட்டுக் கழகங்களால் எமது எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதுடன், எமது நாடும் பயன்பெறமுடியும்.

உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும் மயிலும் விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

குருபூசை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருபாலை சைவபரிபாலன சங்கத்தின் ஆதரவில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு சங்க தலைவர் திரு .வ செல்லத்துரை தலைமைதாங்குவார்.

'அப்பர்காட்டிய வழி' எனும் பொருள்பற்றி இளைப்பாறிய ஆசிரியர் சி. விசாரத்தினம் சிறப்புரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணத்தில்

மற்றுமொரு பாடசாலையில் சிங்கள மாணவருக்கு வகுப்பு

(கல்வியங்காடு)

சிங்களமொழிமூலம் யாழ்ப்பாணத்தில் கல்விகற்ற மாணவர்களது பாடசாலை தற்சமயம் இயங்க முடியாதிருப்பதனால் மேற்படி மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்து கற்க ஒழுங்கு செய்யும் வகையில் யாழ் நகரிலுள்ள ஒரு பாடசாலையில் காலை நேரம் உரிய பாடசாலை மாணவர் கற்கவும், பிற்பகல் சிங்களமொழிமூலம் படிக்கும் மாணவர் கற்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

இத்துடன், சிங்களப் பாடசாலையை அதிவிரைவில் கட்டுவதற்கான நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ளுமாறு மேலிடத்திலிருந்து அறிவிப்பு வந்துள்ளதாகவும், இதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது.

திருக்கேதீஸ்வர உற்சவம்!

விசேட பஸ்சேவை

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் மே மாதம் 6ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 14ம் திகதி தேர் உற்சவமும், 15ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

தேர் உற்சவத் தினத்தன்று வஞ்சரத பவனி இடம்பெறும்.

தீர்த்த உற்சவதினத்தன்று நடேசப் பெருமானும், அம்பாளும் பாலாவிக்கு எழுந்தருளி தீர்த்தமாடுவார்கள்.

திருக்கேதீஸ்வர உற்சவ காலங்களின்போது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவென தமிழ்நாட்டைச் சேர்ந்த சிவாச்சாரியார், ஓதுவார்மூர்த்தி ஆகியோர் திருக்கேதீஸ்வரத்துக்கு வருகை தரவுள்ளனர். உற்சவ காலங்களின்போது யாத்திரிகர்களின் போக்குவரத்து வசதிகளை முன்னிட்டு விசேட பஸ் சேவைகளும் நடாத்தப்படவுள்ளன.

கடந்த வருடங்களைப்போல் இவ்வருடமும் திருக்கேதீஸ்வரத்திலுள்ள சகல மடங்களிலும் அன்னதானம் வழங்கப்படுவதுடன் தண்ணீர்ப் பந்தல்களும் நடாத்தப்படவுள்ளன.

சுகாதார நடவடிக்கைகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை நிர்வாகப் பொறுப்பாளர் புலவர் அ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

மாதகல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது பங்களிப்புக்களை வழங்கியதுடன் இந்த சமய விருத்திக்கும் [illegible] சமய அனுஷ்டானங்களை வளர்க்கவும் பலவேறு திட்டங்களை தீட்டிச் செயல்படுத்திய திரு ஞானம்பிகை அவர்கள் பொது நல பணிகளுக்கு தம் மாலான சரீர உதவி பொருள் உதவி ஆகியவற்றையும் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

கடந்த 85 ஆண்டுகளாக சமூக சேவைக்கே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த திரு ஞானம்பிகை நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் நினைவு என்றும் நம்மத்தியில் நிலைத்து நிற்பதுடன் அவரது கணவரும், பிள்ளைகளும் அவருடைய வழியில் செயல்பட்டு சமூக முன்னேற்றத்துக்கு உதவுவார்களென நம்புவோம்.

எஸ். ஆர். ஜி.

பாலமுடைந்து போக்குவரத்து தடை

(மன்னார்)

மன்னார் பட்டினத்தில் வாகனப்போக்குவரத்திற்கு வசதியாகப் போடப்பட்ட பாலம் ஒன்று ஒருவாரகாலத்திற்குள்ளேயே உடைந்ததால்மீண்டும் போக்குவரத்துத்தடை ஏற்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள மன்னார் சந்தைக்குச் செல்லும் பாலமே ஒருவாரகாலத்திற்குள்ளேயே உடைந்தபாலமாகும்.

பரீட்சைப் பெறுபேறுகளைத் தொடர்ந்து மாணவர்கள் மனந்தளராது
O/L 84 December-ல் உறுதியான முடிவுகளைப் பெற
தம்மைத் தயாராக்கிக்கொள்வதற்கான

8 மாதகால தீவிரப் பயிற்சி வகுப்புகள்

அதிகாலை நேர வகுப்பு	பகல் முழு நேர வகுப்பு DAY CLASS	மாலை நேர வகுப்பு
கிழமை நாட்களில் காலை 6-00- 7-30 சனி, ஞாயிறு காலை 9-15-12-00	காலை 8-00—பி. ப. 1-15 வரை எட்டுப்பாடங்களும் போதிக்கப்படும்	கிழமை நாட்களில் பி. ப. 4-15-6-00 சனி, ஞாயிறு காலை 6-00-8-45
ஏப்ரல் 30-ல் ஆரம்பம்	ஏப்ரல் 30-ல் ஆரம்பம்	ஏப்ரல் 30-ல் ஆரம்பம்

THE EXPRESS INSTITUTE KOPAY

மேலதிக விபரங்கட்கு :

எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரியூட்,
இருபாலை,
கோப்பாய்.

சேந்தாங்குளம் தொழிற்சாலையில்
தினமும் 1500 போத்தல்களில் கள் அடைக்கப்படுகிறது

[மாவிட்டபுரம்]

சேந்தாங்குளம் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்துள்ளதை யடுத்து தினமும் 1500 போத்தல்களில் கள் அடைக்கப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சமாசத்தின் ஆதரவில் சேந்தாங்குளத்தில் அமைக்கப்பட்டிருந்த போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது.

இத்தொழிற்சாலையில் தினமும் 1500 போத்தல் கள் போத்தலில் அடைக்கப்பட்டு வருவதாகவும், இதுவரை 5 ஆயிரம் போத்தல்கள்வரை கள் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் கள் கூடுதலாகக் கிடைக்கும் காலப் பகுதிகளில் பாவனைக்கு உபயோகப்படுத்தும் கள்ளைவிட மீதி வீணாக ஊற்றப்பட்டு வந்தது. மாதம் 60 ஆயிரம் போத்தல்வரை முன்னர் வீணாக ஊற்றப்பட்டது.

ஆனால் இந்த முறை மேற்படி தொழிற்சாலை இயங்க ஆரம்பித்துள்ளதால் வீணாக ஊற்றப்படும் கள்ளைப் பயனுள்ளவகையில் பயன்படுத்த வழியேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்சமய சூழ்நிலைகளால் இங்கு உற்பத்தி செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்டுள்ள கள்ளைச் சந்தைப்படுத்த வசதியீனங்கள் நிலவுவதாகவும், இந்த வசதியீனங்கள் நீங்கினால் மேலும் கூடுதலாகப் போத்தலில் கள் அடைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மின் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வெவ்வேறு பகுதிகளில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி மின் பாவனையாளர்கள் மின்சாரப் பகுதியினரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். (ஈ)

தொழிற்சங்கம் நன்றி

[யாழ்ப்பாணம்]

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் எரிக்கப்பட்ட சமயம், தீயை அணைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும், யாழ். பெரிய ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்களுக்கும் ஸ்தாபன ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்க யாழ். ஐ.வி.ச. கிளை நிர்வாகசபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தொழிற்சங்க உதவி செயலாளர் எஸ். நவரத்தினராசா சகஊழியர் கே. ஜெயச்சந்திரன் அகாலமரணமானதையிட்டு, அவர்கள் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கு அனுதாபத்தை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. (ஈ)

ரூபவாஹினியில் இன்று

மாலை
5 30 நாட்டுவளம் (ஆங்கிலம்)
5-35 'பிக டூனு மாபின்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-30 சிங்கள நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 எதிர்கால நிகழ்ச்சிகள்
7-45 நாடக நிகழ்ச்சி (சிங்களம்)
8 5 செய்திகள் (சிங்களம்)
8-45 தரப்படுத்தல் (விவரணச் சித்திரம்)
9-05 'ஐஸ்' தொடர் சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9 50 'ஐஸ்' தொடர்ச்சி
10-30 உலகச் செய்தித்தலைப்புகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

யாருடையது

யாழ்ப்பாணம் ஸ்ரீசண்முகநாத அச்சகத்தைச் சேர்ந்த திரு எஸ். செல்வராசா என்பவர் யாழ்ப்பாணம் இலங்கை வங்கி 21007 இலக்கக் கணக்குக்குரிய காசோலை ஒன்றினையும், புளியங்கூடலைச் சேர்ந்த திரு வைரம்பு முருகன் என்பவர் நாலு லட்சத்தில் ஒரு தொகைப் பணத்தினையும், திரு கு. சிவநேசன் என்பவர் திரு பொன்னையா தர்மலிங்கத்தின் தேசிய அடையாள அட்டையையும், மானிப்பாயைச் சேர்ந்த திரு எஸ். ஸ்ரீரஞ்சன் என்பவர் திரு சுப்பிரமணியம் ரவீந்திரன் என்பவரின் அடையாள அட்டையையும் கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

இன்றைய பலன்

மாதம் — சித்திரை
திகதி— 15 (27-4-1984)
வாரம்— வெள்ளி
திதி— துவாதசி பின் இரவு வரையும்
நட்சத்திரம் — பூரட்டாதி முன்னிரவு 7-31க்கு மேல் உத்தரட்டாதி.

மேடம்: பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத்தரும் பிறருடன் பகைத்துக் கொள்ளவும் நேரிடும் குடும்பத்திலும் சிறிது புயல் வீசலாம் வெளியிடத் தொடர்புகளில் அமைதிவேண்டும்.

இடபம்: வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாயுண்டு.

மிதுனம்: நினைத்த காரியத்தில் தடையேற்படுவது தவிர்க்க முடியாததாகும் சிலர் கண்டனங்களுக்கு இலக்காக நேரிடலாம் மனத்திடம் விரும்பத்தக்கது.

கடகம்: கல்வித் துறையிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக்கிடைக்கும் எதிர்பாராத இடத்திலிருந்து பொருள் வரவுக்கும் இடமுண்டு நண்பர்களாயின் உதவியும் அவசியம் உண்டு.

சிம்மம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள் வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும் உங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல்வாதி ஒருவர் ஆதரவு கொடுப்பார் இதயத்தில் இன்பம் பொங்கும்.

கன்னி: நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும் நண்பர் ஒருவர் ஏமாற்றி விடுவார் செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு தெய்வ நம்பிக்கை சிறந்த மருந்து.

துலாம்: சிறிய விடயத்திற்குக் கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும் மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடு இடம்பெறும் பொறுமையைப் பேணவும்.

விருச்சிகம்: பல வழிகளிலும் பணம் பாழாகும் வேண்டாத விருந்தினர்களின் வருகை உங்களுக்கு வேதனையைத் தரலாம் நண்பர் ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம் எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

தனுசு: கலைஞர்கள் போற்றப்படுவர் சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைக்கலாம் குருவின் ஆசி தாராளமாக கிடைக்கலாம்.

மகரம்: கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் புதிய கண்டுபிடிப்புகளில் ஊக்கம் ஏற்படும் டாக்டர்கள் போற்றப்படுவார்கள் தூரத்துச் செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும் நல்ல நாள்.

கும்பம்: வாழ்வில் உயர்வு தென்படும் பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும் எழுத்தாளர்களுக்குப் புகழ் குவியும் பொதுவாக கலைஞர்களுக்கு இன்று சிறப்பான நாள்.

மீனம்: திருடர் பயத்துக்கும் இடமுண்டு தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் தொழில்புரியும் இடத்தில் சக தொழிலாளர்களுடன் ஒத்துழைப்பது அவசியம் பொறுமையைப் பேணவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க

நெல்விதைத்து 7 — 21 நாட்களுக்கிடையில்

பாவியுங்கள் "பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

"சேர்கோப்பூர்"

450 மி. லீ —55 ரூபா 8.25 லீற்றர்—875 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி, கிடைச்சி எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"
450 மி. லீ.—55 ரூபா 2 லீற்றர்—240 ரூபா
(2) "ஹெடோனல் எம். 40%"
450 மி. லீ.—35 ரூபா
(3) "ஹெடோனல் D. 55%"
250 மி. லீ.—55 ரூபா

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.
தொலைபேசி : 93563

உங்கள் விநியோகஸ்தர்கள் :-
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், வவுனியா.

அற்றண்டன் தெரிவு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்காக 75 பரிசாரகர்கள் (அற்றண்டன்மார்) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் சிற்றூழியர் மத்தியிலிருந்தே இவர்களில் பெரும்பான்மையோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 24 பேர் பெண் ஊழியர்களாவர்.

இவர்களுக்கான மூன்றுமாத காலப் பயிற்சி இம்மாதம் 16-ம் திகதி தொடக்கம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சி முடிவடைந்ததும் இவர்கள் யாழ். மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் பஸ்சேவை மீண்டும் ஆரம்பம்

மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்திலிருந்து கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்கான தனியார் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து கடந்த சில தினங்களாக தலைமன்னார் துறைமுகத்திலிருந்து தூர இடங்களுக்கு நடைபெற்றுவந்த தனியார் பஸ் சேவைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பஸ் விபத்து

(வேலணை)

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ் ஒன்றும் புங்குடுதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றும் மண்டைதீவுச் சந்தியில் மோதிக்கொண்டதில் பலர் காயமுற்றனர். கடுமையான காயமடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லவராக வாழ்ந்த கந்தசாமி



நல்ல இதயங்கள் அனேகமான நீண்டகாலம் வாழ்வதில்லை என்பதில் உண்மை சிறிது இருக்கத்தான் செய்கிறது!

வல்வெட்டியில் காலமான ஞானசுந்தரம் கந்தசாமி பாதி வழியில் இறைவனடி சேர்ந்துவிட்டார். பாடசாலையில் சாரண இயக்கத்தில்மிகநெருங்கிய ஈடுபாடு கொண்டவராகவும், நாணி சாரணராகவும் இருந்ததால் ஊர்மக்களுக்கு எப்பொழுதுமே உதவியுள்ளவராக வாழ்ந்தார்! ஈ, எறும்புக்குக்கூடத் தீங்குசெய்ய எண்ணாதமனிதர்.

ரயில்வே பகுதியில் பணியாற்றிய வல்வெட்டி ஞானசுந்தரத்துக்குப் புதல்வராகப் பிறந்த இவரைச் சிறியவர்களும், பெரியவர்களும் 'மூத்தண்ணே, மூத்தண்ணே' என்று அன்போடு அழைப்பார்கள்! ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளில் எல்லாம் கந்தசாமி நிற்பார்! ஏதாவது உதவி செய்வார். எப்போதுமே அன்புள்ளவராக எல்லோருடனும் பழகினார் இந்தக் கந்தசாமி!

—ராஜன்

ரீகல் (யாழ். நகர்)
Daily 10-30 a.m.
2-00 p. m only
THE LONG RIDERS
(action-thrill-color)
யாழ் நகரில் கடைசித் தடவையாக காண்பிக்கப்படுகிறது.

ஹரன் (யாழ். நகர்)
எம். ஜி. ஆர் — லதா
உலகம் சுற்றும் வாலிபன்

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 2 காட்சிகள்
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நாகேஷ் நடித்த
பணத்தோட்டம்

ராணி (யாழ். நகர்)
சக்கரவர்த்தி திருமகள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
மறுஅறிவித்தல் வரை
10-30, 2-00 மணி மட்டும்
சிவாஜி — பாரதி
தங்கச் சுரங்கம்
(புதியபிரதி)

வெள்ளி [illegible]
மறு அறிவித்தல் வரை
2-30 காட்சி மட்டும்
கமலஹாசன்-[illegible]
சகலகலாவல்லவன்

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவகுமார், முத்துராமன், ஜெயசித்திரா, அசோகன், மனோரமா நடித்த.
எங்கம்மா சபதம்
[புதிய பிரதி]

ராஜா (யாழ்நகர்)
ஜெமினி - சாவித்திரி
ரங்காராவ்
மாயா பஜார்
(புதிய பிரதி)
28-4-84 முதல்
தங்கை

லிடோ (யாழ்நகர்)
ரவீந்தர் - ரூபா
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-15
ஆசை அறுபது நாள்
(புதிய வண்ணப்பிரதி)

கடைசித்தினம் 30-4-84
சாந்தி (யாழ். நகர்)
Daily 10-30, 2-15, 4-30
Christopher Walken in
HEAVEN'S GATE
(Action-Adults-Color)
Sex-Scope
சுதந்திரத் தீர்த்தாகப் போராடும் பிரான்சு மக்களுக்கும்-அமெரிக்க இராணுவத்திற்கும் ஏற்படும் பயங்கர சண்டைக் காட்சிகள் காணத் தவறாதீர்கள்! குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்?

விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியின் போது மரியன்ஸ் இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இவ்விளையாட்டுப் போட்டியின்போது வெற்றியீட்டிய மாணவிகளுக்கு கல்வி அதிகாரி இசத் ஏ. றகீம் பரிசில்களை வழங்கினார்.

பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலனசபை நடாத்தும் பண்ணிசைப் போட்டி எதிர்வரும் ஞாயிறு காலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வரையறுத்தது)
சுன்னாகம்.

பதவி வெற்றிடங்கள்

மேற்படி சமாசத்திற்குப் பின்வரும் பதவிகளுக்கு சமாச எல்லைப் பரப்பிற்குள் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கிராமிய வங்கி முகாமையாளர் (குறியீட்டு இல. 205:11)
2. தற்காலிக கிளை முகாமையாளர்கள் (குறியீட்டு இல. 208:14)
3. கிளை மேற்பார்வையாளர் (குறியீட்டு இல. 207:11)

விண்ணப்ப முடிவு திகதி: 10-05-1984

மேலதிக விபரங்களையும், மற்றும் விண்ணப்பப் படிவங்களையும் ரூபா 2/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
25-04-1984. (2015)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 21-4-1950

மறைவு: 27-4-1979

முதலியார் வை. மகேசனின் அன்புக் கனிஷ்ட புத்திரன்
வரதராஜன்

என்றும் மறவாத தந்தை, மனைவி, புதல்வி, சகோதரர், மைத்துனர், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்.
நவாலி, 27-4-84. (1978)

31-வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திரு. A. S. கந்தையா

(உரிமையாளர் நியூ கந்தையா குரோசரி ஸ்டோர்ஸ், கொழும்பு)

எம் நினைவில்
என்றும்
நிலைத்திருப்பவர்

மறைவு: 26-3-84

கடமையே கண்ணியமாய் உழைப்பே உயிர்மூச்சாய்க் கொண்டு எம்மை எல்லாம் வாழவைத்து நீள்சாவிடம் பிடித்துக்கொண்ட எங்களது அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம். மற்றும் அன்னாரின் இல்லத்தில் 27-4-84 வெள்ளிக்கிழமை 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளில் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
33, [illegible] வீதி,
கொழும்பு-4. 2024

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆண்டுவிழா வைபவம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடந்தபொழுது சென்ற கலவரங்களின்போது தன் வீடு, உடமைகளுடன் தன் இரு கால்களையும் இழந்த வயது குறைந்த குடும்பஸ்தர் ரஞ்சித்துக்கு ஒரு மூச்சக்கரவண்டியை அரசாங்க அதிபர் [illegible] இ. அரசரத்தினம் அன்பளிப்புச் செய்தபோது எடுத்த படம்.

விளையாட்டு ஒழுக்கம் கட்டுப்பாட்டை வளர்க்கிறது

(யாழ்ப்பாணம்)

"விளையாட்டுப் போட்டிகள் இளம் உள்ளங்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, தலைமைத்துவத்திறன் என்பவற்றை வளர்த்துக் கொள்வதற்கு பயிற்சியளிக்கின்றன. விளையாட்டுகளில் ஒரு தலைமைக்கு கட்டுப்படுகின்ற இயல்பை நாம் காணலாம்"

இவ்வாறு பாடசாலை அதிபர் திரு. க. நடராசா கைதடி இழுவை சனசமூக நிலையத்தில் விளையாட்டுப் போட்டியொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினார்.

இந்நிலையத்தின் போஷகர், தலைவர் ஆகியோர் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பு செய்தனர். சங்கத் தலைவர் திரு. சிவபாதம், செயலாளர் திரு. நாகராசா ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்கள். (வி)

அல்லைப்பிட்டி முதலிடம்

(வண்ணார்பண்ணை)

விளையாட்டமைச்சின் அனுசரணையுடன் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான பிரிவில் அல்லைப்பிட்டி அறிவகம் விளையாட்டுக் கழகம் 62 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தையும், ஆண்களுக்கான பிரிவில் நயினாதீவு ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் 51 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றபோட்டிகளை தீவுப் பகுதிதெற்கு விளையாட்டு அதிகாரி திரு கு பீலிக்ஸ் நடத்தினார்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் நடந்த இப்போட்டியை வைபவத்தில் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரத்தினம் பிரதம விருந்தினராகவும் விளையாட்டமைச்சின் பிரதிநிதி திரு என். சிவதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இப்பகுதியைச் சேர்ந்த ஏழு விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் மொத்தம் 33 [illegible] போட்டிகள் இடம் பெற்றன. (சு)

மாதகல் சமூகசேவகி திருஞானம்பிகை

பொது நல எண்ணம் கொண்டு தமிழுக்கும், சைவத்திற்கும், சமூகத்திற்கும் அளப்பெரும் சேவைகள் புரிந்த மகளிரின் வரிசையில் மாதகல் சின்னத்துரை திருஞானம்பிகை குறிப்பிடத்தக்க ஒருவர்.

பிரபல சமூக சேவையாளரும் 40 ஆண்டுகளுக்கு மேலாக சிதம்பரம் செல்லாய்க்கிழவி மடத்தின் கௌரவ தர்மகர்த்தாவாகவும், பண்டத்தரிப்பு கிராமசபை தலைவராகவும், கல்லூரி அதிபராகவும் விளங்கிய பண்டிதர் இ. இராமலிங்கம் அவர்களின் சிரேஷ்ட புத்திரியாகிய திருஞானம்பிகை தந்தையின் வழிகாட்டலினாலும், பொதுநல நோக்கு இளமையாகவே அவர் மனதில் வளர்ந்திருந்தமையாலும் சிறந்தவோர் சமூக சேவகியாக விளங்கினார்.

இளமையிலேயே கல்வி, சமயம், விளையாட்டு, இசை, நாடக நடிப்புத்துறைகளில் முன்னணியில் திகழ்ந்ததுடன் மாதர் சங்கம், மகளிர் கிராம முன்னேற்ற இயக்கம், இந்து மகளிர் இயக்கம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை, காசநோய் நிவாரண இயக்கம் ஆகியவற்றில் பல்வேறு பதவிகளை வகித்து சேவை புரிந்தார்.

இல்லறவாழ்வில் புகுந்தபின் வரும் சமூக சேவைக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் தமது கணவரின் உதவியுடன் தொடர்ந்தும் இப்பணியில் ஈடுபட்டுவந்தார்.

பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலையின் தோற்றத்திற்கும், மாதகல் மாதர் சங்கத்தின் நிரந்தர [illegible] நிர்மாணிப்பதற்கும்

(5ம் பக்கம் பார்க்க)

சம்பளத்தில் அதிகரிப்பு

(சென்னை)

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், மேல்சபை உறுப்பினர்கள் ஆகியோரின் மாதாந்தச் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது.

முன்னர் 1,050 ரூபாவாக இருந்த இவர்களது சம்பளம் தற்போது 1,250 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது. அமைச்சர்கள், சபாநாயகர் ஆகியோருக்கும் இந்தச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

இத்தகவலை தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் நேற்று சட்டசபையில் அறிவித்தார்.

இதேபோல் இவர்களுக்கு வழங்கப்படும் ரயில் சலுகைக் கட்டணம் ஆண்டுக்கு 6,000 ரூபாவிலிருந்து 4000 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது (சு)

உடுவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கில் சாட்சிகளாக 30 பேரும், 39 சான்றுப் பொருட்களும் இருந்தன.

1-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். சிறிநிவாசா சட்டத்தரணி ஆர். பி. ரட்ணசிங்கம், சட்டத்தரணி திருமதி ரட்ணபாலன் ஆகியோரின் அனுசரணையுடனும் 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி தெய்வேந்திரன் சட்டத்தரணி வே. யோகசுந்தரத்தின் அனுசரணையுடனும் 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசன் வழக்கை நடத்தினர்.

தீர்ப்பு தெரிவிக்கப்பட்டதும் நீதிமன்றத்திலிருந்த சில பெண்கள் அழுததைத் தொடர்ந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

1ம் குற்றச்சாட்டான வீடுடைத்தலுக்கும், 2ம் குற்றச்சாட்டான நகைகள் கொள்ளையடித்ததற்கும், 3 எதிரிகளும் குற்றவாளிகள் என்று ஜூரி சபையினர் ஏகமனதாக தெரிவித்தனர். மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கும் கொலை, கொள்ளைக்கு சதிசெய்த குற்றச்சாட்டுகளுக்கும், 3 எதிரிகளும் நிரபராதிகள் என ஜூரி சபையினர் ஏகமனதாக தெரிவித்தனர்.

1ம் எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 3 வருட கடூழிய சிறையும், 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத்தவறினால் 6 மாத சாதாரண சிறை என்றும் தெரிவிக்கப்பட்டது.

1ம் எதிரிக்கு 2ம் குற்றச்சாட்டுக்கு 7 வருட கடூழியமும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு அபராதம் கட்டத் தவறினால் 10 மாத சாதாரண சிறை என்றும் தெரிவிக்கப்பட்டது. தண்டனை ஒன்று முடிந்த பின் மற்றது அனுபவிக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

2ம் எதிரிக்கு 1ம் குற்றச்சாட்டுக்கு 3 வருட கடூழியமும் 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு. அபராதம் கட்டத் தவறினால் 6 மாத சாதாரண சிறையும் விதிக்கப்பட்டது. 2ம் எதிரிக்கு 2ம் குற்றச்சாட்டுக்கு 7 வருட கடூழியமும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு அபராதம் கட்டத் தவறினால் 10 மாத சாதாரண சிறை என்றும் தெரிவிக்கப்பட்டது. தண்டனை ஒன்று முடிந்த பின் மற்றது அனுபவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

3ம் எதிரிக்கு. 1ம் குற்றச்சாட்டுக்கு 3 வருட கடூழியமும் 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு, அபராதம் கட்டத் தவறினால் 6 மாத சாதாரண சிறை என்றும் தெரிவிக்கப்பட்டது. 2ம் குற்றச்சாட்டுக்கு 7 வருட கடூழியமும், 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு, அபராதம் கட்டத்தவறினால் 10 மாத சாதாரண சிறை என்றும் தெரிவிக்கப்பட்டது. தண்டனை ஒன்று முடிந்தபின் மற்றது அனுபவிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஈ)

இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாடப்பட்டன. இவற்றிற்கு நஷ்டஈடு வழங்குமாறு இலங்கை அரசை இந்தியப்பிரதமர் வற்புறுத்தவேண்டும்" என்றார்

ஐந்து அதிபர்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் என்பது குறிப்பிடத்தக்கது

கல்வி அதிகாரிகளினால் நீதிமன்றங்களில் தாக்கலான இவர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டதன் பின்னரே இவர்களைப் பதவிநீக்கம் செய்ததாக சிரேஷ்ட கல்விஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் உயர்ந்த ஒழுக்கத்தைப் போதிக்கவேண்டிய அதிபர்கள் இவ்வாறு நடந்து கொண்டதையிட்டு தாம் கவலைகொள்வதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

"இப்படியான இடமாற்றத்தினால் மாணவர் கல்வி பாதிப்பு"

[புலோலி]

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் பாடசாலைகளின் தேவைக்குதி ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறாமல் ஆசிரியர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுவதனால் பாடசாலைகளின் அபிவிருத்திகள் தடைபடுவதுடன் மாணவர்களின் கல்வித்தரமும் பாதிக்கப்படுகின்றன.

இவ்வாறு பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக்கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் திரு. பஞ்சநாதம் திரு. செ. சற்குருநாதன் ஆகியோருக்கு நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் உரையாற்றிய அதிபர் திரு. ஆ. க. மாணிக்கம் குறிப்பிட்டார். இப்பிரிவுபசார விழாவிற்கு வித்தியாலய ஆசிரியர் நலன் பேணும் சங்கத் தலைவர் திரு. மா. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய அதிபர் திரு. மாணிக்கம் குறிப்பிட்டதாவது

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் பாடசாலைகளின் தேவைக்குதி ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறவில்லை. வருடத்தின் இடைக் காலங்களிலும் ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இதனால் பாடசாலைகளில் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் திட்டப்படி செயற்படமுடிவதில்லை இதுபாடசாலைகளின் அபிவிருத்தியையும் மாணவர்களின் கல்வித்தரத்தையும் பாதிக்கின்றது. இப்பொழுது பாடசாலைகளின் தேவைக்குதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதில்லை. ஆசிரியர்களுக்குப்பாடசாலை வழங்கப்பட வேண்டுமென்பதாலேயே ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுகின்றன.

இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆசிரியர்களான திரு பஞ்சநாதம் திரு. சற்குருநாதன் ஆகியோர் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்து உரையாற்றினர்.

திரு பஞ்சநாதம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கும் திரு சற்குருநாதன் பருத்தித்துறை கலட்டிரோமன் கத்தோலிக்க பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கள...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அன்று ஒரு வகுப்பறைக்குள் தங்கியிருந்தனர்.

சிங்கள மகாவித்தியாலய அதிபர் வரவில்லை. 24 ஆசிரியர்களில் 10 ஆசிரியர்கள் மட்டும் வந்திருந்தனர் சுமார் 400 மாணவர்களில் 87 மாணவர் மட்டும் வந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மாணவர்களாகும்.

சிங்களப் பகுதிகளில் தமிழ் பாடசாலை இல்லாத இடங்களில் சிங்களப்பாடசாலைகளில் சிங்களமொழி மூலம் பயின்ற தமிழ் மாணவர்களில் சுமார் 200 பேர் கடந்த ஜூலைக் கலவரத்தின்பின் யாழ்ப்பாணம் வந்திருந்தனர் என்றும், அவர்கள் தொடர்ந்து இங்கும் சிங்கள மொழியில் பயிலவேண்டியிருந்ததால் சிங்கள மகாவித்தியாலயத்தில் சேர்ந்தனரென்றும் கூறப்படுகிறது.

பலர் 5-ம் வகுப்பு முதல் ஜி. சி. ஈ வகுப்புவரை சிங்கள மொழிமூலம் கற்றுவிட்டதால், தொடர்ந்தும் சிங்கள மொழிமூலமே கற்கவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிங்கள மகாவித்தியாலயம் எரிக்கப்பட்டபோது முக்கிய தஸ்தாவேஜுகள் இடாப்புகள் எல்லாம் எரிக்கப்பட்டுவிட்டதால் மாணவர்கள் தொடர்பான சரியான விபரங்கள் தெரியவில்லையென்று ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

தமது மகன் ஆரம்ப வகுப்பு ஜி. சி. ஈ. வரை சிங்களமொழி மூலம் கற்றுள்ளதாகவும், இவ்வருட இறுதியில் பரீட்சை எடுக்க விருப்பதாகவும் ஒருவர் தெரிவித்தார்

இம்மாணவர்கள்தொடர்ந்து தங்கள் கல்வியை மேற்கொள்ள மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்விப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ஈ)

யாழ். சுங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கால வாகனத்தில் சுங்கப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டது.

காலை 11-30 மணியளவில் ஏலவிற்பனை நடந்துகொண்டிருந்தபோது ஆறு இளைஞர்கள் துப்பாக்கிகளைக்காட்டி வெளியில் நின்ற மக்களைத் தடுத்து நிறுத்திவிட்டு உள்ளேசென்று ஏலவிற்பனை மூலம் கிடைத்த பணத்தை கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது தொலைபேசி தொடர்புகள் நடைபெறாதபடி அவர்கள் கண்காணித்ததாகவும் கூறப்படுகிறது.

பணத்தைப் பையொன்றில் போட்டுக்கொண்டு அங்குள்ள காரொன்றில் 6 இளைஞர்களும் ஏறிச் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை தொடர்ந்து சுங்க பகுதிக்கு பொலிஸார் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

பொலிஸ் விசாரணையில்; குறிப்பிட்ட துப்பாக்கி இளைஞர்கள் வந்ததாகக் கூறப்படும் இரண்டு சைக்கிள்கள் அநாதரவான நிலையில் கல்லுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதென்றும், கொள்ளையடித்தபின்னர் இவர்கள் சென்ற கார், சுங்கப்பகுதியினரின் அலுவலகக் கார் என்றும் தெரிகின்றது.

யாழ் சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். கணேஸ் நேற்று 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவிக்கையில் ஏலவிற்பனை மூலம் பத்துலட்சம் ரூபா கிடைத்தது என்றும் ஏழுலட்சம் ரூபா இரும்புப் பெட்டகத்தில் இருந்தது என்றும் இப்பணம் இப்போது பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

கூட்டுறவு சம்மேளன அமைப்புபற்றிய மகாநாடு

[வண்ணார்பண்ணை]

தீவுப்பகுதியின் தேசிய கூட்டுறவு சம்மேளனம் அமைப்பது தொடர்பான மகாநாடு அண்மையில் வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மகாநாட்டுக்கு வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. நா. பாலச்சந்திரன் தலைமை தாங்கினார். இந்த மகாநாட்டுக்கான ஏற்பாடுகளை இச்சங்கத்தின் பொது முகாமையாளர் செல்வி இ. சோமசுந்தரம் மேற்கொண்டிருந்தார்.

கூட்டுறவு தலைமைக் காரியாலய கல்விப் பிரிவு பரிசோதகர் திரு. பொ. கந்தையா கூட்டுறவுப் பரிசோதகர் ஜனாப் எம். ஐ. கலீமான் ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தேசிய கூட்டுறவு சம்மேளனத்தின் செயற்பாடுகள் நோக்கங்கள் பற்றி ஆராய்ந்த இம்மகாநாட்டில் 1984-ம் ஆண்டில் தேசிய கூட்டுறவு மகாநாடு நடத்துவது பற்றியும் ஆராயப்பட்டது.

9 ஆயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி அதன் மூலம் தீர்வு காணலாம் என்று வேறு சாரார் கருதுகின்றனர். இவை இரண்டுக்கும் இடையில் இருசாராரும் ஏற்கும் முறையில் ஒரு புதிய வழிவகை காண்பதில் அக்கறை எடுக்கவேண்டும்" என்று ஆயர்மார் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினை மேலும் வளர்க்காமல், விரைவாகவே தீர்வுகாணும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் சமுகமான முடிவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கருத்து வெளியிடப்பட்டது.

இச்சந்திப்பு மிகவும் சமுகமான முறையில் நடந்தது. பேச்சுவார்த்தை மூலம் ஓர் தீர்வைக் காணமுடியுமென்ற பொதுவான கருத்து தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகேயும் கலந்து கொண்டார்.

மரண அறிவித்தல்

திருமதி
செல்வநாதன் ஆசீர்வாதம்மா

திருமதி செல்வநாதன் ஆசீர்வாதம்மா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 27 ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ் நகரில் வசித்துவருமானவர். இவர் காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை செல்வநாதன் அவர்களின் அருமை மனைவியும் திரு. அன்ரன் செல்வநாதன், திரு எட்வேட் செல்வநாதன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), திருமதி மேரி திரேசா அமிர்தநாயகம், காலஞ்சென்ற யோசவ் செல்வநாதன் அவர்களின் அருமைத் தாயாரும், திரு. செலஸ்ரின் அமிர்தநாயகம் (கட்டட படவரைஞர்) திருமதி திரேசம்மா செல்வநாதன் (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ. க. பாடசாலை), அவர்களின் மாமியாரும், செல்வி சுபோதினி செல்வன் நிருபநாயகம், செல்வி நிரஞ்சினி, திருநாயகம் அமிர்தினி அவர்களின் பாட்டியாரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் "சுவா - ஞானபதி" உரைப்புலம், ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து 28-04-84 சனிக்கிழமை காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

E. செல்வநாதன்,
ஆசிரியர்

"சுவா-ஞானபதி"
உரைப்புலம், ஆனைக்கோட்டை.

2042

பலே ஆசாமிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் பகுதியில் இரு கடைகளில் பெறுமதிமிக்க பொருட்களை வாங்கிய ஒரு கோஷ்டியினர் அதற்குரிய பணத்தைக்கொடுக்காமல், சிறிய தொகையை மட்டும் செலுத்தி விட்டு சென்றுள்ளதாக, இருவர்த்தகர்கள் யாழ். பிரஜைகள் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல், யாழ். பெரிய கடையில் உள்ள ஜவுளி நிலையத்திற்குச் சென்று இரண்டு 'ரி' ஷேர்ட்டுகள் உட்பட மற்றும் பல பொருட்களை அக்கோஷ்டியினர் வாங்கி விட்டு, 'பில்லை'க் குறைத்துப் போடுமாறு எச்சரிக்கைசெய்ததாகவும், பின்னர் அப்பொருட்களுக்கு உரிய பணத்திற்குப்பதிலாக சொற்ப பணத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

மூவரைக் கொண்ட இக் கோஷ்டியில் ஒருவர் வெளியில் நிற்க இருவர் உள்ளே சென்று பொருட்களை வாங்கியதாகக் கூறப்படுகிறது.

நவீன மார்க்கட்டிலுள்ள மற்றொரு கடையில் விலை உயர்ந்த இரு 'சென்ற்' போத்தல்களையும் மற்றும் சில சாமான்களையும் வாங்கிவிட்டு 537 ரூபா 50 சதத்திற்குப் பதிலாக 100 ரூபாவை மட்டும் செலுத்திவிட்டுச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கடைக்கும் மூவர் வந்து பொருட்களை வாங்கியதாகவும், மற்றொருவர் வெளியில் நின்றதாகவும் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபருக்கும் புகார் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. (ஈ)

புதிய சங்கம்

[மன்னார்]

எருக்கலம்பிட்டி மாதர் பனம் பொருள் அபிவிருத்தி ஐக்கிய நாணயச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எருக்கலம்பிட்டி அரசினர் முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியை திருமதி ஆசோ சகாப்தீன் தலைமையில் நடைபெற்றது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, [illegible] அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number, B 100286/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone: 23389 - 24186.